## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2016 ஓகஸ்ட்**

**வினாத்தாள் - II** | **1 மணித்தியாலம் 15 நிமிடம்**

**01.** பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

பாரி என்ற மன்னன் தாவரங்களிடமும் பிராணிகளிடமும் இரக்கமும் அன்பும் வைத்திருந்தான். ஒரு நாள் பாரி தன் தேரிலேறிக் காட்டு வழியே சென்றான். செல்லும் வழியில் செழித்து வளர்ந்த முல்லைக் கொடியைக் கண்டான். அக்கொடி, பற்றிப் படர்வதற்கு கொழுகொம்பின்றித் தவித்தது. வேகமாக வீசும் காற்றினால் அங்குமிங்கும் அசைந்தாடியது.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) பாரியின் குணவியல்பு ஒன்றை எழுதுக.
: ..........................................................................................

(ii) பற்றிப் படர்வதற்கு கொழுகொம்பின்றித் தவித்தது எது?
: ..........................................................................................

(iii) 'மெதுவாக' என்னும் சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
: ..........................................................................................

(iv) 'தேரிலேறி' என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.
: ..........................................................................................

(v) விசிறியும் சுழியும் கொண்ட எழுத்தையுடைய சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.
: ..........................................................................................

(vi) பந்தியில் குறிப்பிடப்படும் இணைமொழியை எழுதுக.
: ..........................................................................................

**02.** சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) விமானம் / விமாணம்

(ii) ஆயுழ் / ஆயுள்

**03.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

(i) ...................... (அவர் / அவர்கள்) மேசையின் மீது தொலைபேசியை வைத்தார்.

(ii) பாலாவும் சுனிலும் தேசிய கீதத்தைப் .............................. (பாடினார் / பாடினார்கள்)

(iii) பூக்கள் .......................... (மலர்ந்தது / மலர்ந்தன)

(iv) மழை பெய்தமையால் மயில் ........................... (ஆடும் / ஆடியது)

2016

**04.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

பசு கதறும் என்பது போல ஆந்தை ..................................

**05.** கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி பழமொழியைப் பூரணப்படுத்துக.

.................................. செய்பவர் படாது படுவார்.

**06.** கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

வீண் செலவு செய்பவன் : ..........................................................................................

**07.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

(i) நாம் பெரியோருடன் ஏட்டிக்குப் போட்டியாகக் கதைத்தல் கூடாது. தடித்த எழுத்திலுள்ள மரபுத் தொடரின் கருத்து .................................. (பிடிவாதமாக , விதண்டாவாதமாக) என்பதாகும்.

(ii) அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா .......................... (பொன் விழா, வைர விழா)

(iii) அவள் இனிமையாகப் பாடினாள். இங்கு அவள் என்பது (படர்க்கை ஒருமை, தன்மை பன்மை) சொல்லாகும்.

**08.** கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

காரிருள் அகத்தில் நல்ல
..........................................
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்

www.Edukinniya.lk

09. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்.

(வித்துவான் க. வேந்தனார் இயற்றிய பாடலின் சில வரிகள்)

இப்பாடலில் வரும் உவமானத்தை எழுதுக.

............................................................................................................................

10. பின்வரும் வாக்கியத்தை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.

நான் தேத்தண்ணி குடிச்சேன் : ...........................................................................

11. (i) கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

Waterfall : ...........................................................................

(ii) உருவில் தரப்பட்டுள்ள விலங்கின் ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துகளில் எழுதுக.



: ...........................................................................

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

(i) Where .................... (is, are) the playground?

(ii) I am ..................... (go, going) out.

13. பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தில் ஆங்கில எழுத்துகளில் எழுதுக.

இது எனது பாடசாலை : ...........................................................................

14. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

பரவியா : ...........................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

மீண்டும் வாருங்கள் : ...........................................................................

16. பாடசாலைத் தவணை இறுதி விடுமுறை கிடைக்கும்வரை நான் பொறுமையின்றிக் காத்திருந்தேன். விடுமுறை காலத்தை வினோதமாகக் கழிக்குமாறும் கற்றல் பணிகளை மறந்துவிடாது இருக்குமாறும் ஆசிரியை கூறியது என் மனதில் பதிந்துள்ளது. "பாடசாலை விடுமுறைக் காலத்தை நான் கழித்த விதம்" என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)


- ...........................................................................
...........................................................................
- ...........................................................................
...........................................................................
- ...........................................................................
...........................................................................

more Past papers
at www.Edukinniya.lk

- தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.

17. இந்த எண் சட்டத்தில் வகைகுறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

: ...........................................................................




18. கீழே தரப்பட்டுள்ள எண்ணுக்கு முன்னால் உள்ள எண்ணையும் பின்னால் உள்ள எண்ணையும் உரோம எண் குறியீடுகளில் எழுதுக.

: ..................... ix ...........................................

புலமைப் பரிசில் பரீட்சை

2016

AptitudeExam.com




**19.** உருளை ஒன்றில் உள்ள வளைந்த மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது?


: ..............................................................

**20. (i)** ¼ இன் சமவலுப் பின்னத்தை எழுதுக. : ..............................................................

**(ii)** எதிரே தரப்பட்டுள்ள உருவில் 0.3 ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



**21.**



இந்த உருவுக்கு எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?

: ..............................................................

**22.** 130 பென்சில்களை 7 பேர்களிடையே சமமாகப் பங்கிடும்போது எஞ்சும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

: ..............................................................

**23.** பிற்பகல் 4.30 மணிக்கு புத்தகம் ஒன்றை வாசிக்க ஆரம்பித்த கவிதாவுக்கு அதனை வாசித்து முடிப்பதற்கு 1 மணித்தியாலம் 35 நிமிடங்கள் எடுத்தது. அவர் புத்தகத்தை வாசித்து முடித்த நேரம் இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

: ..............................................................

**24.**


| | |
|---|---|
| 275 | 80 |
| 324 | 139 |

பெட்டியினுள்ளே உள்ள எண்களில் இரண்டு எண்களைக் கூட்டினால் 404 கிடைக்கும். அவ்விரண்டு எண்களையும் தெரிவு செய்து எழுதுக.

: ..............................................................

www.Edukinniya.lk

**25.** ஒரு பூங்காவின் பகுதி ஒன்று கீழே வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




**(i)** சிற்றுண்டிச்சாலை பிரதான வாயிலிருந்து எத்திசையில் அமைந்துள்ளது?


: ..............................................................

**(ii)** வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதை வழியே நபர் ஒருவர் பிரதான வாயிலின் A என்னும் இடத்திலிருந்து குளத்தின் B என்னும் இடம் வரை பயணம் செய்தாராயின், அவர் பயணம் செய்த மொத்தத் தூரம் கிலோமீற்றர், மீற்றர் ஆகியவற்றில் எவ்வளவு?


: ..............................................................

**26.** இந்த உருவினுள் காணப்படும் செங்கோணத்திலும் குறைந்த கோணங்களில் எண்ணிக்கை யாது?

: ..............................................................



**27.** பின்வரும் உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1 cm உம், அகலம் 1 cm உம் ஆகும். உருவில் நிழற்றப்பட்டுள்ள நான்கு வடிவங்கள் *A, B, C, D* எனப் பெயரிடப்பட்டுள்ளன.




**(i)** எழுத்து *D* இனால் காட்டப்படும் வடிவத்தின் சுற்றளவு எவ்வளவு?

: ..............................................................

**(ii)** பரப்பளவில் சமமான வடிவங்களுக்கு உரிய எழுத்துகளை எழுதுக.

: ..............................................................

28. ஒரு புத்தகத்தின் விலை ரூ. 40 எனவும் ஒரு பென்சிலின் விலை ரூ. 12 எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது?

(i) கடைக்குச் சென்ற அருணாவுக்கு மூன்று புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?

: ..........................................................


(ii) அருணா, மூன்று புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்கிக் கொண்டு கடை உரிமையாளருக்கு ரூ. 50 காசுத் தாள்கள் 3 ஐக் கொடுத்தாராயின், அவருக்குக் கிடைத்த மீதிப் பணம் எவ்வளவு?

: ..........................................................

29. 6 kg 500 g சீனியிலிருந்து எத்தனை 250 g சீனிப் பைக்கற்றுகளைத் தயாரிக்கலாம்?

: ..........................................................

30. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு பாடசாலையின் மாணவர்களில் 150 புள்ளிகளை விடக் கூடிய புள்ளிகளைப் பெற்று தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை வகைகுறிப்பதற்கு இந்த வரைபு வரையப்பட்டுள்ளது.




(i) தரம் 5B இல் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை தரம் 5C இல் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். தரம் 5C இல் தகைமைபெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) அப்பாடசாலையில் தகைமை பெற்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: ..........................................................

(iii) தகைமை பெற்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 3/4 பங்கினருக்கு பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் அனுமதி கிடைத்ததாயின், அம்மாணவர் எண்ணிக்கை யாது?

: ..........................................................

- 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.

31. இளஞ் சிவப்பு நிறத் தளிர்களை உருவாக்கும் தாவரம்
(1) எலுமிச்சை (2) நாகமரம் (3) வெற்றிலை (4) பலா

32. ஒரு வித்தினை மாத்திரம் கொண்ட பழம்
(1) நெல்லி (2) விளாம்பழம் (3) மங்குஸ்தான் (4) மாதுளை

33. ஒரு குறித்த காலத்தில் அன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவர வகை பின்வருவனவற்றுள் எது?
(1) இறப்பர் (2) தென்னை (3) முள்முருக்கு (4) ரம்புட்டான்

34. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் விலங்கு
(1) ஆந்தை (2) பருந்து (3) வண்ணாத்திப்பூச்சி (4) நத்தை

35. பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டி பரம்பலடையும் வித்து
(1) எண்ணை (2) துத்திரி (3) காசித்தும்பை (4) எருக்கலை

36. செதுக்கப்பட்ட விலங்குகளின் வரிசையைக் கொண்ட மிகச் சிறந்த கலைப் படைப்பு
(1) கல்லேடு (2) நிறைகுடம்
(3) சந்திரவட்டக்கல் (4) தொல்பொருளியல் இலச்சினை

37. இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப் பிரசித்திபெற்ற இடம்
(1) ருவன்வெலிசாய (2) காலிக்கோட்டை (3) சிவனொளிபாதம் (4) தூபாராமை

38. இலங்கைக்கு கிழக்கே காணப்படும் ஒரு நாடு
(1) மலேசியா (2) இந்தியா (3) இங்கிலாந்து (4) கிரீஸ்

39. பற்சில்லுகளைக் கொண்ட ஓர் உபகரணம்
(1) துவிச்சக்கரவண்டி (2) ஒற்றைச் சில்லு வண்டி
(3) தேங்காய்துருவி (4) மின்விசிறி




more Past papers
at www.Edukinniya.lk

40. பின்வரும் எந்த விளையாட்டில் கைக்கவசம், காற்கவசம் என்பன அணியப்படுகின்றன?
(1) எல்லே (2) கரப்பந்து (3) கிரிக்கெற் (4) பட்மின்டன்

41. நீரப்பிசாசு அமைப்பு யாருக்குப் பயன்படும்?
(1) விவசாயிகளுக்கு (2) சுழியோடிகளுக்கு (3) மீனவர்களுக்கு (4) நீச்சல் வீரர்களுக்கு


42. தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்த வேண்டிய பொருள்கள் இரண்டு
(1) தொலைபேசி, பேனை (2) சீப்பு, பற்தூரிகை (3) சீப்பு, குடை (4) குடை, பற்தூரிகை

43. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் 'பெருங்கரடி' உடுத் தொகுதியைக் காட்டும் உரு எது?



(1) (2) (3) (4)

44. சூரிய ஒளி உள்ள ஓர் இடத்தில் உருவில் காணப்பட்டுள்ள உபகரணத்தை வைத்து நீர்ப் பாத்திரத்திலுள்ள நீரைச் சூடாக்க முடியும். இதில் பாத்திரம் A இற்காக பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தலாம்?




(1) நன்கு மினுங்கும் அலுமினியத் தாச்சி (2) புதிய மட்பானை
(3) அதிக தடிப்புடைய கண்ணாடிக் கோப்பை (4) பிளாஸ்டிக் பேசின்

45. உடல் வளர்ச்சியில் கூடிய பங்களிப்புச் செய்யும் உணவுப் பொருள்களின் கூட்டம்
(1) சோறு, சீனி, பாசிப்பயறு (2) பருப்பு, பசளி, வல்லாரை
(3) பருப்பு, பாசிப்பயறு, சோயா அவரை (4) மாம்பழம், அன்னாசி, தோடம்பழம்

46. இறைச்சியை நீண்ட காலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை
(1) உப்புக் கரைசலில் அமிழ்த்தி வைத்தல் (2) அவித்தல்
(3) தேனில் அமிழ்த்தி வைத்தல் (4) சுவையூட்டிகளைச் சேர்த்தல்

47. பண்டைய அரசர்களினால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன கைத்தொழில் மூலம் எமது நாட்டில் பிரதானமாகச் செய்யப்படும் ஓர் உற்பத்தி
(1) தேயிலை (2) உப்பு (3) மரக்கறி (4) அரிசி

48. நீர்வெறுப்பு நோய் ஏற்படுவதற்குக் காரணமாக நோய்க் கிருமிகளை மனித உடலினுள் பின்வரும் எப்பிராணி புகுத்துகின்றது?
(1) நுளம்பு (2) கரப்பான் பூச்சி (3) பூனை (4) வீட்டு ஈ

49. இலங்கையில் பரவும் பெரும் எண்ணிக்கையான கொள்ளை நோய்களுக்குக் காரணமாக அமையும் பிராணி வகை?
(1) எலி (2) நாய் (3) நுளம்பு (4) ஈ

50. பிரபல எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவும் உலகிற்குச் சிறந்த சேவையாற்றியவர்
(1) சேர், ஆதர் சி. கிளாக் (2) சேர். டீ.பி. ஜயதிலக
(3) கலாநிதி ரீ.பி.ஜாயா (4) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

51. இலங்கைக்கு முதன்முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றை பெற்றுக் கொடுத்தவர் யார்?
(1) சுசந்திகா ஜயசிங்க (2) டங்கன் வைட்
(3) ஜூலியன் போலிங் (4) தீபிகா சண்முகம்

52. சமூக விரோதச் செயற்பாடு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
(1) போதைப்பொருள் வியாபாரம்
(2) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
(3) புகைபிரத நிலையத்தில் புகைபிடித்தல்
(4) பஸ் வண்டியினுள் உணவுப் பொருள்களை விற்பனை செய்தல்

www.Edukinniya.lk

53. குளம் ஒன்று காணப்படும் இடத்தைக் குறித்துக் காட்டுவதற்கு இலங்கைத் தேசப்படங்களில் பயன்படுத்தப்படுவது
(1) நீல நிற நீண்டகோடு
(2) நீல நிறக் கோட்டின் மீது இடப்பட்டுள்ள புள்ளி
(3) நீல நிறத்தில் நிறந்தீட்டப்பட்டுள்ள சிறிய பிரதேசம்
(4) ஓர் இடத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட நீல நிறக்கோடுகள் சில

54. பாடசாலைத் தோட்டத்தில் மிளகாய்ப் பாத்தி ஒன்றைத் தயார் செய்வதற்குத் தெரிவுசெய்ய வேண்டியது
(1) சூரிய ஒளி குறைவாகக் கிடைக்கின்ற பாரிய மரங்கள் உள்ள கற்களை கொண்ட தரையாகும்.
(2) கற்களைக் கொண்ட நீர் வடிந்தோடும் சமதரையாகும்.
(3) சூரிய ஒளி நன்கு கிடைக்கின்ற நீர் வழிந்தோடும், கற்கள் அற்ற சம தரையாகும்
(4) சூரிய ஒளி மிகக் குறைவாகக் கிடைக்கின்ற பாரிய மரங்களைக் கொண்ட கற்கள் அற்ற சம தரையாகும்.

55. நபர் ஒருவருக்கு வானவில் தென்படக்கூடிய சந்தர்ப்பம்?
(1) மின்னலுடன் பெருமழை பெய்யும் போது
(2) பெருமழையுடன் காற்று வீசும் போது
(3) சூரிய ஒளியுடன் சிறு மழை பெய்யும் போது
(4) சூரிய ஒளியுடன் உலர்காற்று வீசும் போது

more Past papers
at www.Edukinniya.lk

56. அதிபர் ஒருவருக்குப் பாடசாலை வேளையின் போது அவசரக் கூட்டம் ஒன்றுக்காக ஆசிரியர்களையும் அனைத்து மாணவர்களையும் பிரதான மண்டபத்தில் ஒன்று கூட்டுவதற்கு அவசியமாக உள்ளது. பாடசாலையில் அனைத்து வசதிகளும் உள்ளதாயின், கூட்டத்திற்கு வருகை தருமாறு அனைவருக்கும் ஒரே தடவையில் அறிவித்தல் வழங்குவதற்கு அதிபர் பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் ஊடகம் எது?
(1) தொலைபேசி (2) கணனி (3) அறிவித்தல் பத்திரம் (4) ஒலிபெருக்கி

57. இலங்கையின் பெருந்தெருக்களில் ஓடும் பாதைகளின் மேல் வீதிச் சட்ட திட்டங்களுக்கு அமைவாகக் கோடுகள் வரைவதற்குப் பயன்படுத்தப்படும் நிறங்கள் எவை?
(1) மஞ்சள், கறுப்பு (2) கறுப்பு, வெள்ளை
(3) மஞ்சள், வெள்ளை (4) மஞ்சள், சிவப்பு

58. இலங்கையில் பொது வாகனங்கள் மூலம் ஆற்றப்படும் போக்குவரத்துச் சேவை, பொது மக்களுக்கு மிகவும் பிடித்தமான சேவையாக அமைவதற்குப் பின்வரும் எந்த யோசனையை நடைமுறைப்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்?
(1) குறித்த கால அட்டவணைக்கு ஏற்ப அனைத்து பொது வாகனங்களும் பயணம் செய்தல்
(2) பொது வாகனங்களில் தொலைக்காட்சி, வானொலிப் பெட்டி ஆகியவை இயக்கப்படுதல்
(3) மதிய வேளைகளின் போது பொது வாகனங்களின் ஓட்டங்களை மட்டுப்படுத்துதல்
(4) பயணிக்கும்போது சில நிறுத்தும் இடங்களில் மாத்திரம் பொது வாகனங்களை நிறுத்துதல்

59. தீ பற்றியதன் காரணமாக உடலின் ஒரு பகுதி எரிந்த நபரொருவருக்கு முதலுதவியைப் பெற்றுக் கொடுக்கையில் எம்மால் முதலில் செய்ய வேண்டியது எது?
(1) எரிந்த பகுதியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆடைகளை அகற்றுதல்
(2) எரிந்த பகுதியில் மீது எண்ணை வகை ஒன்றைப் பூசுதல்
(3) கொப்புளங்கள் மீது பூச்சு வகை ஒன்றைப் பூசுதல்
(4) சுத்தமான குளிர்நீரால் எரிந்த பகுதியைக் குளிர்மையாக்கல்

60. 'சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம், தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டு மக்கள் யாவரும் இருப்பார்களாக!' இக்கருத்தை வெளிப் படுத்துவது இலங்கையின்
(1) தேசியக்கொடி (2) அரச இலச்சினை (3) தேசிய மரம் (4) தேசிய கீதம்